மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5,000 மக்கள் தொகை கொண்ட ஒரு கிராமத்திற்கு ஒரு துணைச் சுகாதார நிலையம் என்ற வகையில் அரசு நடவடிக்கை எடுத்து இப்போது எல்லா இடங்களிலும் அமைத்திருக்கிறது. இந்த இடத்தைப் பொறுத்தவரையிலே, இந்த கிராமத்திற்கு அருகிலேயே அச்சுதமங்கலம் என்ற ஊரில் ஒரு துணைச் சுகாதார நிலையம் இருப்பதாகத் தகவல் தந்திருக்கிறார்கள். ஒருவேளை நாம் வைத்திருக்கிற நார்ம்ஸ்-க்குள்ளே அது வராமல் இருந்தால் அதை நாம் அமைப்பது சிரமமாக இருக்கும். எனவே, வருகிற ஆண்டில் அந்த நிலைமையைப் பார்த்து, ஆய்வு செய்து ஜனத்தொகை அதிகமாக இருக்குமேயானால் அதற்கேற்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 406, திருமதி கே. மரியம் உல் ஆசியா, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

406—

ஈரோட்டில் தனி இரயில்வே டிவிசன் அமைத்தல்

*11415—திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஈரோட்டில் தனி இரயில்வே டிவிசன் அமைக்க மத்திய அரசிடம் மாநில அரசு வலியுறுத்துமா?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிர்வாக வசதி கருதி பாலக்காடு இரயில்வே டிவிஷனிலிருந்து திருவனந்தபுரம் இரயில்வே டிவிஷன் பிரிக்கப்பட்டது போலவும், மைசூர் இரயில்வே டிவிஷனில் இருந்து பெங்களூர் டிவிஷன் பிரிக்கப்பட்டது போலவும், கரூர்-திண்டுக்கல்-மதுரை-தூத்துக்குடி அகல இரயில் பாதை ஆரம்பித்துவிட்டதால் பாலக்காடு டிவிஷனுடைய கிலோ மீட்டர் தூரம் அதிகமாவதால் ஏற்படுகிற நிர்வாகச் சிரமங்களும், தேக்க நிலையும் தீர்க்கப்பட்டு துரிதமாக நிர்வாகம் செயல்படுவதற்கும், அதிகாரிகள், தொழிலாளர்களுக்குக் கூடுதலாக வேலைவாய்ப்பு கிடைப்பதற்கும், பெண்களுக்கான கோட்டாவும், முன்பதிவு வசதிகள்

1993 ஏப்ரல் 21]

எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்கும், ஈரோட்டில் மத்திய அரசின் பெரிய அலுவலகமாக ஈரோடு இரயில்வே டிவிஷன் அமையும் வகையிலும், தமிழகத்திற்கு அதிக பயன்தரக்கூடியதாக இருப்பதால் பாலக்காடு இரயில்வே டிவிஷனில் இருந்து பிரிந்து ஈரோடு இரயில்வே டிவிஷன் ஏற்படுவதன் முக்கியத்துவத்தை கருதி மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்துத்தான் நமது அரசு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்திருக்கிறது. சேலத்தில் அதைப்போன்ற நிலைமையை உருவாக்கலாம் என்றும், பாலக்காடு டிவிஷனை இரண்டாகப் பிரித்து சேலத்தில் ஒரு டிவிஷனை உருவாக்கலாம் என்றும் அரசு பரிந்துரை செய்திருக்கிறது. சேலத்திற்கும் ஈரோட்டிற்கும் அருகாமையில் இருக்கின்ற காரணத்தால்தான் இல்லை என்று நான் பதில் அளித்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். (குறுக்கீடு) திருமதி மரியம் உல் ஆசியா, நேரம் ஆகிவிட்டது. ஆகவே, ஒரு துணை வினாவோடு நிறுத்தினால் நல்லது. (குறுக்கீடு) திருமதி கே. மரியம் உல் ஆசியா.

முற்பகல் 10-45

திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சேலத்தில் தனி டிவிஷன் ஆரம்பிக்க மத்திய அரசை வலியுறுத்தும் என்று சொல்லி இருக்கிறார்கள். தூங்கிக் கிடந்த தமிழகத்தைத் தட்டி யெழுப்பிய தன்மானத் தந்தை பெரியார் அவர்கள் பிறந்த ஈரோட்டில் இந்த இரயில்வே டிவிஷன் அமைப்பதற்கும், மேலும், கரூர்- தூத்துக்குடி அகல இரயில்வே பாதைத் திட்டத்தினால் ஈரோடு மிகப் பெரிய ஜங்க்ஷனாக ஆகிறது. ஜம்முதாவியில் இருந்து கன்னியாகுமரி வரை செல்லக்கூடிய அனைத்து வண்டிகளும் ஈரோடு வழியாகத்தான் செல்ல வேண்டும். ஈரோட்டின் முக்கியத்துவம் கருதி, தமிழக மக்களின் நீண்ட கால கோரிக்கையை ஏற்று தமிழர்கள் பாதுகாவலர் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு, மத்திய அரசை ஈரோட்டிலே அந்தத் தனி இரயில்வே டிவிஷனை அமைக்க வலியுறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூங்கிக் கொண்டிருந்த தமிழகத்தைத் தட்டி எழுப்பியவரான நம்முடைய ஒப்பற்றத் தலைவியாக இருக்கின்ற தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலே தான் சேலத்திலே இதைக் கொண்டுவர இருக்கின்ற காரணத்தினால் ஈரோட்டிலே அது தேவையில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 407, திரு. காஞ்சி பன்னீர்செல்வம். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்

407—

காஞ்சிபுரம்-செங்கல்பட்டு இருவழி இரயில் பாதை.

*16344—திரு. காஞ்சி பன்னீர்செல்வம் :
மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரத்திற்கும் செங்கல்பட்டிற்கும் இடையே இருவழி இரயில்பாதை அமைக்க மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

காஞ்சிபுரத்திற்கும் செங்கல்பட்டிற்கும் இடையேயுள்ள மீட்டர்கேஜ் இரயில்பாதை குறைந்த அளவில் பயன்படுத்தப் படுகிறது. மேலும், இந்த இரயில் பாதையை இருவழி இரயில் பாதையாக்குவதற்கு போதுமான போக்குவரத்து இல்லையெனத் தென்னக இரயில்வேப் பொது மேலாளர் தெரிவித்துள்ளார். எனவே, இதுபற்றி மத்திய அரசை வற்புறுத்த அவசியம் இல்லை எனக் கருதப்படுகிறது.

திரு. காஞ்சி பன்னீர் செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாடாளுமன்றத்திலே நான் உறுப்பினராக இருக்கின்ற நேரத்திலே இந்த செங்கற்பட்டு-காஞ்சிபுரம், காஞ்சிபுரம்—அரக்கோணம் என்று இரண்டிற்கும் இரு வழிப் பாதை அமைக்கவேண்டும் என்றும், அதிலே குறிப்பாக துரித ரெயில்வே பாதை அமைக்கவேண்டும் என்று நான் அங்கே உரையாற்றி, அதற்கு பின்னாலே அன்றைக்கு மத்திய ரெயில்வே அமைச்சராக இருந்த திரு. ஜார்ஜ் பெர்னாண்டஸ் அவர்களிடம் தனியாக நான் ஒரு கடிதத்தைக் கொடுத்த நேரத்திலே கூட அவர் உடனடியாக தென்னக ரெயில்வேயிக்கு பரிந்துரை செய்து எனக்குக்கூட ஒரு கடிதம் வந்திருக்கிறது. அந்த கடிதத்திலே உங்களுடைய கோரிக்கை பரிசிலிக்கப்படும் என்று கூட தென்னக ரெயில்வே மூலமாக கடிதம் அன்றைக்கு வந்திருக்கிறது. அந்த கடிதம் கூட என்னிடத்திலே இருக்கிறது. எனவே மாநில அரசு இந்த இருவழிப் பாதையை மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.